# IN THE COURT OF I ADDITIONAL DISTRICT JUDGE, CUDDALORE.
# O.S.No. 64 Of 2022

| | | |
|---|---|---|
| **Witness Rank** | : | PW2 |
| **Name of the Witness** | : | ஞானசௌந்தரி |
| **Father's Name** | : | |
| **Age** | : | |
| **Occupation** | : | |
| **Address** | : | |

Solemnly affirmed in accordance with the provisions of The Oaths Act, 1969 (Act 44 of 1969) on the 4th day of February, 2026.

பிரதிவாதி தரப்பில் குறுக்குவிசாரணை :-

நீதிமன்றத்தில் இருந்து சாட்சியம் அளிக்க அழைப்பாணை வரவில்லை என்றால் சரிதான். என்னை சாட்சி சொல்ல முதல்வாதி மங்கலட்சுமி என்னை அழைத்து வந்தார். மங்கலட்சுமியின் கணவர் பெயர் ரத்தனசாமி ஆகும். எனது பிரமாணவாக்குமூலத்தில் இரத்தினவேலு என இருந்தால் அது தவறானது. நான் கிழக்கு ராமாபுரத்தில் குடியிருக்கிறேன் என்பதை காண்பிக்க எனது ஆதார் அட்டை தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். எனக்கு கணவர் உள்ளார். அவர் விவசாயக் கூலி வேலை செய்வார். கேரளாவிற்கு சென்று எனது கணவர் வேலை செய்து வருமானம் ஈட்டி வந்தார் என்றால் சரிதான்,, அவருடன் நானும் கேரளாவிற்கு செல்லுவேன் என்றால் சரியல்ல. எனக்கும் என் கணவருக்கு தனிப்பட்ட

வருமானம் கிடையாது என்றாலும் நாங்கள் இருவரும் கடலூர் முதுநகர் பகுதியில் யாசகம் எடுத்து சம்பாதித்து வருகிறோம் என்றால் சரியல்ல. மங்கலட்சுமிக்கும் இரத்தனசாமியுடன் எப்போது எங்கே திருமணம் ஆனது என்ற விவரம் என்னால் செல்ல முடியாது என்றால் சரிதான். மனோகரியின் இரத்தனசாமியின் அக்கா மகள் ஆவார். இரத்தனசாமிக்கு மனோகரிக்கும் குழந்தைகள் உள்ளது எனக்கு தெரியாது. மங்கலட்சுமிக்கு 2 பிள்ளைகள் மகன் பெயர் ரகுமான். மகள் பெயர் தெரியாது. மங்கலட்சுமி இரத்தனசாமியும் எந்த காலகட்டத்திலும் கணவன் மனைவியாக வாழ்ந்தது கிடையாது என்று சொன்னால் சரியல்ல. மேற்சொன்ன ரகுமான் மற்றும் நான் செல்லும் மங்கலட்சுமியின் மகள் இருவரும் இரத்தனசாமிக்கு பிறந்தவர்கள் கிடையாது என்றால் சரியல்ல. ரத்தனசாமி மனைவி மனோகரி என்றாலும் அவரை தான் திருமணம் செய்து இறுதி வரை இரத்தனசாமி வாழ்ந்தார் என்று சொன்னால் சரியல்ல. என்னுடைய ஏழ்மையை பயன்படுத்தி வாதிகள் பொய் சாட்சியம் பெற்றுள்ளார்கள் என்றாலும் நான் அவர்கள் கேட்டுக்கொண்டதற்கு இணங்க பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

<u>மறுவிசாரணை</u> இல்லை.

*Typed to my dictation in open Court, read over and interpreted to the Witness. Admitted and acknowledged by him / her to be Correct.*

*Tmt.G.Saraswathi*
*I Additional District Judge*
*Cuddalore*